**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No.212/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW–15</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | Dr.கார்த்திகேயன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | பாலசுந்தரம் | தொழில் | : | மருத்துவர் |
| கிராமம் | : | தென்காசி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on Thursday of 04.06.2026.

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 06.09.2023 அன்று காலை 07.35 மணியளவில் நான் பணியில் இருக்கும் போது, முருகேஸ்வரி என்ற 29 வயதுடைய பெண் நபரை அவருடைய அத்தை முத்துலட்சுமி என்பவர் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவர் தன்னை அடையாளம் தெரிந்த 3 ஆண் நபர்கள் மரக்கட்டையால் அதே தினம் காலை 02.30 மணிக்கு லிங்கராணியம்மன்கோவில் அருகே வைத்து தாக்கியதாக கூறினார். அவருக்கு தலைவலியும், இடது கையில் வலி இருப்பதாக கூறினார். அவருக்கு குறிப்பிடும் படியான வெளிக்காயம் எதுவும் இல்லை. அவருக்கு இடது கைப்பகுதியில் நுண்கதிர் படம் எடுத்து பார்த்ததில் எலும்பு முறிவு எதுவும் இல்லை.

அவரை புறநோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சாதாரண காயங்கள் எனச் சான்று

வழங்கினேன். விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அ.சா.ஆ.9 ஆகும். காயம்பட்டவருக்கு ஏற்பட்ட காயங்கள் அவர் சொன்ன நேரத்தில் அவர் சொன்ன மாதிரி தாக்கப்படும் போது ஏற்பட வாய்ப்புள்ளது. இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்ட நபர் 02.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாகத் தான் கூறினார் என்றால் சரிதான். தலைவலி, இடது கை வலி என்று காயம்பட்டவர் சொன்னது பொய்யாகவோ, பாசாங்காகவோ இருக்கலாம் என்றால் சரிதான். மரக்கட்டையை காண்பித்து என்னிடம் கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.06 15:27:02 +0530